தமிழ் நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
மற்றும் இந்திய வானிலைத் துறை இணைந்து வழங்கும்
வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனைகள் - காஞ்சிபுரம் & செங்கல்பட்டு மாவட்டம்
வேளாண் அறிவியல் நிலையம் – காஞ்சிபுரம்.
( 19.03.2022 முதல் 23.03.2022, 8.30 மணி வரை )

**அறிக்கை எண் 022/ கே.வி.கே/கே.பி.எம்/2022** *நாள்* & **தேதி**: வெள்ளிக்கிழமை & 18.03.2022

**வானிலை முன்னறிவிப்பு** (19.03.2022 முதல்23.03.2022, 8.30 மணி வரை)

| | 19.03.2022 | 20.03.2022 | 21.03.2022 | 22.03.2022 | 23.03.2022 |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ.) | **00** | **00** | **00** | **00** | **00** |
| அ.வெப்பநிலை | 38 | 38 | 39 | 39 | 39 |
| கு. வெப்பநிலை | 23 | 23 | 24 | 24 | 24 |
| ஒப்புஈரப்பதம் I | 65 | 65 | 65 | 65 | 65 |
| ஒப்புஈரப்பதம் II | 45 | 45 | 45 | 45 | 45 |
| காற்றின்வேகம் (கி.மீ/மணி) | 10 | 10 | 08 | 08 | 08 |
| காற்றின் திசை | தெற்கு தென்கிழக்கு | தெற்கு தென்கிழக்கு | தென்மேற்கு | வடமேற்கு | வடக்கு வடமேற்கு |
| மேக மூட்டம் | பெரும்பாலும் தெளிவாக காணப்படும் | பெரும்பாலும் தெளிவாக காணப்படும் | பெரும்பாலும் தெளிவாக காணப்படும் | பெரும்பாலும் தெளிவாக காணப்படும் | பெரும்பாலும் தெளிவாக காணப்படும் |

**வானிலை முன்னறிவிப்பு தகவல்கள்**: காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டதைப் பொறுத்தவரையில், அடுத்து வரும் ஐந்து நாட்களுக்கும் மழைக்கு வாய்ப்பின்றி வறண்ட வானிலையே நிலவ வாய்ப்புள்ளது. வெப்பநிலை அதிகபட்சமாக 38-39 டிகிரி செல்சியஸ் வரையும் குறைந்தபட்சமாக 23-24 டிகிரி செல்சியஸ் வரையும் பதிவாக்கலாம். மேலும் காற்றானது மணிக்கு 08-10 கி.மீ. வேகத்தில் வடக்கு வடகிழக்கு - வடமேற்கு திசையில் வீசலாம். காற்றின் ஈரப்பதமானது 45-65% வரை பதிவாக்கலாம் **பொது அறிவிப்பு**: வரும் 23.03.2022 - 29.03.2022 தமிழ் நாடு மற்றும் புதுவையை பொறுத்தவரையில் இயல்பை விட அதிகமான மழைக்கும் மற்றும் குறைந்தபட்ச & அதிகபட்ச வெப்பநிலை இயல்பிற்கு மேல் மிதமான அளவில் பதிவாக்கலாம்.

## வானிலை சர்ந்த வேளாண் ஆலோசனைகள்

| பயிர் | பருவம் | ஆலோசனைகள் |
|---|---|---|
| பொது அறிவிப்பு | | விவசாயிகள் உளுந்து மற்றும் பச்சை பயறு அறுவடைக்கு பின் வயலை உழவு செய்யலாம். மழைக்கு வாய்ப்பில்லை என்பதினால் விவசாயிகள் மண்ணின் ஈரப்பத்தினை அறிந்து பயிர்களுக்கு பாசனம் செய்யலாம். |
| குறுந்செய்தி | | பழ மற்றும் மர பயிர்களில் சுருள் வெள்ளை ஈ தாக்கம் ஏற்ப்பட வாய்ப்புள்ளதால் விவசாயிகள் பூச்சியை கட்டுப்படுத்த 3% வெப்ப எண்ணெயை தெளிக்கலாம். |
| பயிர்கள் - நெல் | தூர் கட்டும் & கதிர் வரும் பருவம் | நெல் வயலில் தண்டுத் துளைப்பான் தாக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் பூச்சி தாக்க அறிகுறிகளான முழு தானியக் கதிர்களும் காய்ந்து வெண்கதிர்கள் தென்படுமாயின் ஹக்டருக்கு குளோரோடேரினிலிபுருள் 150 கிராம் அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம். |
| கரும்பு | கிளைப்பு பருவம் | கரும்பு பயிரை தாக்கும் இளம் குருத்து புழுவினை தாக்கத்தினை கட்டுப்படுத்த விவசாயிகள் கார்போ.ஃபியூரான் குருணைகளை 10 கிலோ/ஏக்கர் என்ற அளவில் மண்ணில் இடலாம். |
| கத்தரி | காய்க்கும் பருவம் | காய்க்கும் பருவத்தில் உள்ள கத்தரி சிலந்தி கரையான் பூச்சிகள் தாக்க வாய்ப்புள்ளதால் பூச்சியை கட்டுப்படுத்த விவசாயிகள் டைக்கோபால் 18.5 கிகி 2மிலி/லிட்டர் (அ) நனையும் கந்தகம் 3 கிராம்/லிட்டர் என்ற அளவில் தெளிக்கலாம். |
| தென்னை | மரம் | விவசாயிகள் தென்னையை தாக்கும் சுருள் வெள்ளை ஈயை கட்டுப்படுத்த வெப்ப எண்ணெய் 3% அல்லது இமிடாகுளோப்ரிட் 0.5-1 மிலி/லிட்டர் தண்ணிரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். |
| வாழை | மரம் | தென்னை மரத்தினை தாக்கும் சுருள் வெள்ளை ஈயானது வழைப்பயிரை தாக்க வாய்ப்புள்ளதால் பூச்சியை கட்டுப்படுத்த வெப்ப எண்ணெய் 3% அல்லது |

| | | |
|---|---|---|
| | | இமிடாகுளோப்ரிட் 0.5-1 மிலி/லிட்டர் தண்ணிரில் கலந்து தெளிக்காலம். |
| கொய்யா | மரம் | தென்னை மரத்தினை தாக்கும் சுருள் வெள்ளை ஈயானது கொய்யா மரத்தினை தாக்க வாய்ப்புள்ளதால் பூச்சியை கட்டுப்படுத்த வெப்ப எண்ணெய் 3% அல்லது இமிடாகுளோப்ரிட் 0.5-1 மிலி/லிட்டர் தண்ணிரில் கலந்து தெளிக்காலம். |
| கால்நடை அறிவியல் | கறவை மாடுகள் | விவசாயிகள் கறவை மாடுகளுக்கு வெயில் காலத்தில் போதிய அளவு சுத்தமான குடி நீரை பருக அளிக்கலாம். விவசாயிகள் கறவை மாடுகளுக்கு குடல் புழு நீக்கம் மற்றும் உண்ணிகளை நீக்கம் செய்ய அருகிலுள்ள கால்நடை மருந்தகத்தை அணுகவும். |
| | செம்மறி மற்றும் வெள்ளாடு | வெயில் காலத்தில் ஆடுகளுக்கு அதிகப்படியான பசுந்திவனம் மற்றும் தீவன மர இலைகளை அளிக்கலாம். விவசாயிகள் ஆட்டுக்கொட்டகையில் தாது உப்பு கட்டிகளை கட்டிவைப்பதன் ஆடுகளில் வளர்ச்சி விகிதத்தினை அதிகரிக்கலாம். |
| | கோழி | கோழிகளுக்கு பி- காம்ப்லெக்ஸ் திரவத்தினை குடிநீருடன் கலந்து அளிப்பதால் வெப்ப தாக்க அழற்சியை குறைக்கலாம். அதிகபட்ச வெப்பநிலை நிலவ இருப்பதால் கோழிகளுக்கு விவசாயிகள் சுத்தமான குடிநீர் மற்றும் பசுந்திவனங்களை அளிக்க வேண்டும். |
| மீன்வளம் | உள்நாட்டு மீன் வளர்ப்பு | பாசிகளின் அடர்த்தி/ஒளி உட்புக தன்மையை 30-45 செண்டி மீட்டர் வரை பராமரிக்கலாம். மேலும் மீன் தீவனத்துடன் 4-6% வரை பூண்டு பசையை கலந்து அளிப்பதால் மீன்களின் ஆரோக்கியத்தினை பாதுகாக்கலாம். |
| | மீன் வளம் | மீன்களில் ஏற்படும் நோய் தொற்றினை அறிய விவசாயிகள் காலை அல்லது மாலை நேரங்களில் மீன் குளங்களில் மீன் மாதிரிகளை சேமித்து நோய்க்கான அறிகுறிகளை ஆராய்ந்து தக்க மேலாண்மை முறைகளை கையாளலாம். |
| | அலங்கார மீன் வளர்ப்பு | அலங்கார மீன் வளர்ப்பு விவசாயிகள் மீன் தொட்டிகளில் அமோனியா அளவை கட்டுப்படுத்த மீன் தொட்டிகளில் கழிவுகளை கற்ற அறிவுறுத்தப்படுகிறார்கள். |
| இந்த வானிலை சர்ந்த வேளாண் ஆலோசனை தகவல்கள் காஞ்சிபுர வேளாண்மை அறிவியல் நிலையம் தொழில்நுட்ப வல்லுநர்களின் ஒப்புதலோடு வெளியிடப்படுகிறது. | | |

திட்ட அலுவலர்,
மாவட்ட வானிலை பிரிவு
வேளாண் அறிவியல் நிலையம் – காஞ்சிபுரம்